# ஃபோர்டெஸ்க்யூ மெட்டல்ஸ் குரூப் மற்றும் ஃபோர்டெஸ்க்யூ ஃபியூச்சர் இண்டஸ்ட்ரீஸ் ஆகியவற்றின் நிர்வாகத் தலைவரும் நிறுவனருமான டாக்டர். ஆண்ட்ரூ ஃபாரெஸ்ட் உடனான பிரதமரின் சந்திப்பு

மே 23, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, 23 மே 2023 அன்று ஆஸ்திரேலியாவின் சிட்னியில் ஃபோர்டெஸ்க்யூ மெட்டல்ஸ் குழுமம் மற்றும் ஃபோர்டெஸ்க்யூ ஃபியூச்சர் இண்டஸ்ட்ரீஸின் செயல் தலைவரும் நிறுவனருமான ஆஸ்திரேலிய முன்னணி தொழிலதிபர் டாக்டர் ஆண்ட்ரூ ஃபாரஸ்ட்டை சந்தித்தார்.

2. பசுமை ஹைட்ரஜன் துறையில் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் ஃபோர்டெஸ்க்யூ குழுமத்தின் திட்டங்களை பிரதமர் வரவேற்றார். இந்தியாவின் லட்சியமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை வலியுறுத்தி, பசுமை ஹைட்ரஜன் மிஷன் போன்ற இந்தியாவால் மேற்கொள்ளப்படும் மாற்றத்தக்க சீர்திருத்தங்கள் மற்றும் முன்முயற்சிகளை பிரதமர் எடுத்துரைத்தார்.

3. இந்தியாவில் ஃபோர்டெஸ்க்யூ ஃபியூச்சர் இண்டஸ்ட்ரீஸ் திட்டங்கள் குறித்து டாக்டர் ஃபாரெஸ்ட் பிரதமருக்கு விளக்கினார்.

**சிட்னி**

**மே 23, 2023**